# நாட்டார் தெய்வ வழிபாட்டில் தொடர்பாடல் : மறவன்புலவு கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**றுக்ஷி வினோதா, அ., ரகுராம், சி., அனுதர்ஷி, க.**
ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
rukshyarulnesan21@gmail.com

*நாட்டாரியலை ஓர் இன அல்லது சமூக குழுமம் பாரம்பரியமாகப் பேணிவரும் பண்பாடு, வழக்குகள் பற்றி ஆராயும் அறிவியல் எனக் கொள்ளலாம். நாட்டாரியலின் மிகக் குறிப்பிடத் தக்க அம்சமாகவே நாட்டார் நம்பிக்கைகள் காணப்படுகின்றன. மானுடவாழ்வின் அனைத்து அம்சங்களிலும் நம்பிக்கைகள் காணப்படுகின்றன. சில நம்பிக்கைகள் பகுத்தறிவிற்கு ஒவ்வாததாக இருக்கும் போது அவை மூடநம்பிக்கைகளாகக் காணப்படும். நாட்டார் சூழலில் பல நம்பிக்கைகள் யதார்த்தத்திற்குப் பொருத்தமாக, காரணகாரியத் தொடர்பு களுடன் இருப்பதனையும் சில நம்பிக்கைகள் மூட நம்பிக்கைகளின் பேறாக இருப்பதனையும் அவதானிக்கலாம். அந்தவகையில், ஆன்மீக நம்பிக்கையின் அடித்தளமாக நாட்டார் தெய்வ வழிபாடுகளும், கிராமிய தெய்வங்களும் காணப்படுகின்றன. மக்கள் அணுகக்கூடிய தாயிருக்கும் இக்கிராமிய தெய்வங்கள் மிக எளிமையானவையாகக் காணப்படும். மக்களுடன் மிக நெருக்கமான தொடர்பாடற் பண்புகள் சிறப்பாக அமைந்திருக்கும். அந்தவகையில், யாழ்ப்பாண மாவட்டத்தின் சாவகச்சேரி பிரதேச செயலகப்பிரிவில் அமைந்துள்ள மறவன்புலவு கிராமத்தின் நாட்டார் தெய்வ வழிபாடுகளையும் அவற்றில் தொடர்பாடல் எவ்வாறு அமைந்துள்ளது என்பதையும் மக்கள் எவ்வாறான ஈடுபாட்டுடன் அத்தொடர் பாடலில் ஈடுபடுகின்றனர் என்பதையும் கண்டறியும் நோக்கில் “நாட்டார் தெய்வ வழிபாடுகளில் தொடர்பாடல்” என்பதாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வில் கள ஆய்வு, குவிமையக் கலந்துரையாடல்கள் மற்றும் நேர்காணல்கள் மூலம் பெறப்பட்ட பெறுதிசார் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆளுள், ஆளிடை, குழு, ஆள்கடந்த, பிரசன்னமில்லாத் தொடர்பாடல் வகைகளோடு, வாய் மொழிசார் மற்றும் வாய்மொழிசாரா தொடர்பாடல் முறைமைகளும் மறவன்புலவு கிராமத்தின் நாட்டார் தெய்வ வழிபாடுகளில் இன்றும் விரவிக் காணப்படுவது ஆய்வின்வழி அடையாளப்படுத்தப்பட்டது. அதேவேளை, சாமியாடல், நேர்த்தியும் நிறைவேற்றமும், குறிசொல்லுதல், தீயபண்புகளை விலக்க மந்திரமிடல் போன்ற சிக்கலான தொடர்பாடல் அம்சங்கள் நிறைந்த சடங்குகள் மிக அருகிவருவதும் ஆய்வில் தெரியவந்தது. ஒருவகையில், நாட்டார் தெய்வ வழிபாட்டிற்கே உரித்தான தொடர்பாடற் சூழல் வாழ்வுமுறை மாற்றங்களுள் சிக்கற்தன்மையிலிருந்து இலகுநிலைக்கு நகர்வதும் பெரிதும் உணரப்பட்டது.*

**திறவுச்சொற்கள்:** நாட்டாரியல், தெய்வ வழிபாடு, தொடர்பாடல்